போவதில் பயனில்லை. பிறகு இம்மாதிரி நடந்துகொண்டே தான் இருக்கும். நம்முடைய நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு, அதற்காகத்தான் நான் விளக்கம் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் உள்ளத்தில் இருக்கிற காரணத்தினுல், சுமுக முடிவு என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி குறிப்பிட்டு சுட்டிக் காட்டுவதன் மூலம் ஜாதி பற்றிய நிலைமைகள் ஏற்படக்கூடும். அவை களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத் தான், அதைப் பற்றி விசாரணை நடத்தி சுமுகமான சூழ்நிலை ஏற்படவேண்டும். ஜாதி அடிப்படையில் மாணவர்கள் பிரிவதோ அல்லது வேறு வகை யில் பிரிவதோ எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல என்று நான் தீவிரமாகக் கருதுவதன் காரணத்தினுல் தான், அதைப்பற்றி நட வடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி மேலும் வளர்கின்ற அளவுக்குப் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தவும், தொடர்ந்து நிலையான உறுதியான சுமுக முடிவு ஏற்பட வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, அவையில் பிற அலுவல் களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரையில் கைநெசவாளர்கள் கைது செய்யப்பட்டதும் அதையொட்டிய கிளர்ச்சியும், மறியலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான கைநெச வாளர்கள் கடந்த 24—10—1970-ம் தேதி முதல் கூலி உயர்வு கோரி நடந்த கிளர்ச்சியில் 146 பேர்கள் கைது செய்யப்பட்டதும், தொடர்ந்து கிளர்ச்சியும், மறியலும் நடத்தவிருக்கும் நிலைமையினுல் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர். இது அரசின் அன்ருட அலுவல்களின் கீழ் வருகிற காரணத்தினுல், இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) கிராம அதிகாரிகள் நடத்த இருக்கும் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சீமைச்சாமி அவர்கள்

"the proposed strike by the village officers in the State due to failure of Government to implement their demands presented to Government on 28th March 1970.